# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2009, மே மாதம் 22 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

*[2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]*

*ச.வ.ஓ. 45/2008*

**2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் அதற்கான காப்புவாசகத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

> (2) முதன்மைச் சட்டவாக்கத்தின் நியதிகளின்படி பெயர்குறித்த நியமனம் பற்றிய அறிவித்தல் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடும் கட்டளையின்மூலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய தேதி இத்திருத்தம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பத்து மாதங்களுக்குப் பிந்தாத தேதியொன்றாக இருத்தல் வேண்டும்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*